**S.C.No. 188/2017**

**PW1 – Thiru. Panneerselvam**

**04.03.2025**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை..

**குறுக்கு விசாரணை...**

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு என்றால் சரிதான். சம்பவயிடத்தில் சம்பவத்தின் போது அக்கம் பக்கத்தில் வீடுகள் இருந்தன என்றால் சம்பவத்தின்போது வீடுகள் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சுறா என்பவரது வீட்டிற்கும் சர்ச்க்கும் இடையே 500 மீட்டர் தூரம் இருக்குமா என்றால் அதைவிட குறைவாக தான் இருக்கும். நான் முதல் விசாரணையில் கூறியது போல் தான் போலீஸாரின் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். இறந்துபோன சுறா கயிற்று கட்டிலில் இறந்து கிடந்தாரா, மேற்படி கட்டிலில் இரத்த கறை படிந்திருந்தது. மேற்படி எந்த வித கட்டில் என்று தெரியாது. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் ஹாலோபிளாக் கற்களில் இரத்த கறை படிந்திருந்ததா என்றால் ஹாலோபிளாக் கற்கள் இருந்தது இரத்த கறை படிந்திருந்ததா என்று அதுபற்றி எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்திற்கு தகவல் கூறிய அரைமணி நேரத்தில் காவல் ஆய்வாளர் மற்றும் போலீஸார் அங்கு வந்தார்கள் என்றால் சரிதான். போலீஸார் தான் ஆம்பூலன்ஸ்க்கு தகவல் கூறி அதன்பின் இறந்துபோனவரையும், அடிபட்டவரையும் மருத்துவமனை எடுத்து சென்றார்கள் என்றால் சரிதான். எதிரிகள் எக்ஸ்.எல். வாகனத்தில் வந்தார்கள் என்றாலும் அந்த வாகனத்தை போலீஸார் கைப்பற்றி போனார்கள் என்றால் சரிதான். இந்த சம்பவம் குறித்து போலீஸார் தவிர வேறு யாருக்கும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அடிப்பட்ட ராஜேஜையும் ஆம்புலன்ஸில் ஏற்றும் போது போலீஸார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னை சம்பவயிடத்தில் போலீஸார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். எதிரிகள் சென்றதாக சொன்ன எக்ஸ்.எல். வாகனத்தின் நிறத்தை பற்றி போலீஸார் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. அடிப்பட்ட ராஜேஷ் மீதும் இறந்துபோன சுறா என்பவர் மீதும் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன

என்றால் சரிதான். போலீஸார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.